31-10-1970

# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

95-ம் புத். | 1970-ம் ஞு ஐப்பசி மீ 31-ந் உ சனிக்கிழமை | பிரதி சதம் 15 | 41-ம் இல.

### மன்னூர் மாவட்ட
### ஆசிரியர் ஆசிரியைகளின் ஞானஒடுக்கம்

மேற்படி ஆசிரியர்களுக்கு மருதமடுத் திருப்பதியில் வருகிற கார்த்திகை மாதம் 4-ந்தேதி புதன்கிழமை சாயந்தரம் தொடக்கம் 7-ந்தேதி சனிக்கிழமை காலைவரை ஞான ஒடுக்கம் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வண. ரி. செல்வராஜ், எஸ். ஜே. சுவாமிஅவர்கள் தியானங்களை நடாத்துவார். எனவே, மேற்கூறிய மாவட்டத்திற்கு அடங்கிய ஆசிரியர்களும், ஆசிரியைகளும் பங்குபற்றி ஒத்துழைக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஜி. ரி. பாலசுந்தரம், ஓ. எம். ஐ.
மேற்றிராசன மறைக்கல்வி
மேற்பார்வையாளர்.

# பரி. தந்தை இலங்கையைத் தரிசிப்பார்



பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசர் தமது தூரகிழக்கு ஆசிய பிரயாணத்தை முடித்துக்கொண்டு திரும்பும் வழியில் மார்கழி 4ஆம் தேதி இலங்கையில் சில மணி நேரம் தங்கிநிற்பாரெனத் தெரியவருகிறது. பாப்பரசரைக் கொண்டுசெல்லும் விமானம் கட்டுநாயக விமானநிலையம் வந்தடைந்ததும் அவ்வமயம் அரசாங்க அதிகாரிகள், மற்றும் பிரமுகர்கள் பலரும் அவரை வரவேற்பர். வரவேற்பு நிலையத்துக்கு அண்மையாக நமது பரி. தந்தை திருப்பலிப்பூசையும் நிறைவேற்றுவாரெனவும் அறிகிறோம்.

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலிருந்து பரி. தந்தையை வரவேற்கப் பயணம்செய்ய விரும்புவோரின் வசதிக்காக விசேஷ ஒழுங்குகள் செய்ய ஆலோசனைகள் நடக்கின்றன. பாப்பரசரின் இலங்கைத் தரிசனை உறுதிப்படுத்தப்பட்டதின்பின் இவைகளைப்பற்றிய விபரங்கள் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

## வேதசாட்சிகள் திருயாத்திரிகர்களுக்கு பரி. தந்தையின் விசேட பேட்டி

சென்ற ஞாயிறு தினம் பரிசுத்த தந்தை ஆங்கில-வேல்ஸ் தேச வேதசாட்சிகள் நாற்பதின்மருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் சூட்டிய போது 10,000 யாத்திரிகர்கள் வத்திக்கான் சம்பேதுருமகா தேவாலயத்தில் நடந்த திருச்சடங்கைக் கண்டு மகிழ்ந்தனர், இங்கிலாந்து வேல்ஸ் தேச மேற்றிராணிமார்சங்கமே இத் திருயாத்திரைக்குத் தலைமை தாங்கியுள்ளது. வைபவத்துக்கு முந்திய நாளே வத்திக்கானில் பிரித்தானியா நாட்டு அரசியல் தூதுவரான திரு. டெஸ்மன்ட் கிறெளலி பிரித்தானிய பிரமுகர் யாவருக்கும் சிறந்த விருந்துபசாரம் அளித்தார். அதன் பின் 26-ம், 27-ம், 28-ம் திகதிகளில் திரிதின ஆராதனைகள் முறையே நடைபெற்றது. யாத்திரிகர் யாவருக்கும் பரிசுத்ததந்தை விசேஷ பேட்டி அளித்து உற்சாக வார்த்தைகள் உரைத்தார்.

## ஆரும் சின்னப்பரின் தூரகிழக்கு ஆசியப் பயணம்

மணிலா (பிலிப்பைன்ஸ்) சிட்னி (ஆஸ்திரேலியா)

**27 நவம்பர்**

காலை: மணிலாவிற்கு வருதல்: குருக்கள், துறவிகள், துறவினிகள் இவர்களுக்காகப் பேராலயத்தில் திருப்பலி.

மாலை: மாநிலத் தலைவரையும் மற்ற அதிகாரிகளையும் சந்தித்தல்.

**28 நவம்பர்**

காலை: ஆசிய ஆயர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ளல்.

மாலை: கூட்டுப்பலி: இப்பலியின்போது அனைத்து ஆசியாவிலிருந்து 90 திருத்தொண்டர் (Daecons) களுக்குக் குருப்பட்டம் அளித்தல்.

**29 நவம்பர்**

காலை: இறை மக்களுக்காகத் திருப்பலி: 'ரேடியோ வேரித்தாஸ்' வானொலி நிலையத்திற்குச் சென்று ஆயர் கூட்ட முடிவுக்கான செய்தியை வெளியிடல்.

மாலை: கிறிஸ்துவ ஒன்றிப்புக் கூட்டம், மணிலாவில் ஒரு பகுதியைச் சுற்றிப் பார்வையிடல்.

**30 நவம்பர்**

மாலை: ஆஸ்திரேலியா — சிட்ணியை அடைதல்: குருக்கள் துறவிகள் எல்லோருக்காகவும் திருப்பலி.

**1 டிசம்பர்**

காலை: ஆஸ்திரேலியா, ஓசியானு ஆயர்கூட்டத்தில் கலந்துகொள்ளல்.

மாலை: நாட்டின் அதிகாரிகளைச் சந்தித்தல். இரண்டாம் நூற்றுண்டு விழாவின் நினைவாகத் திருப்பலி.

**2 டிசம்பர்**

காலை: அற நிறுவனங்களைப் பார்வையிடல்; இறை மக்களுக்காகத் திருப்பலி.

மாலை: நியூ சவுத் வேல்சின் அதிகாரிகளைச் சந்தித்தல் — கிறிஸ்துவ ஒன்றிப்புக் கூட்டம்.

**3 டிசம்பர்**

மிஷன் நாடுகளுக்காகத் திருப்பலி.

மணிலாவிலும், சிட்னியிலும் வழமைபோல் திருத்தந்தை பிரதிநிதிகளின் இல்லத்தில் தங்குவார்.

## அயர்லாந்தில் வின்சென்ற் டீ போல் சபை

1833-ம் ஆண்டில் ஆரம்பமாகின இச் சபையின் சேவை அயர்லாந்து தேசத்தைச் சேர்ந்தது 1844-ம் வருடத்திலாகும். இச்சபையில் இன்று 700,000 அங்கத்தவர் இருக்கின்றனர்—நூறு தேசங்களில் பரவி இருக்கின்றது. சென்றவருடம் அயர்லாந்து தேசத்தின் புள்ளி விபரங்களின்படி அத்தேசத்தில் 12,000 அங்கத்தவர் உளர், இவர்கள் 370,500 வறியவர்களைத் தரிசித்திருக்கின்றனர், இவர்கள் பொது உபயோகத்துக்குச் சேர்த்த பணம் 715,090 பவுண்பெறுமதியானது. இவற்றில் 10,500 பவுண் பெறுமதியான பணம் வெளிநாட்டுச் சேவைக்கென அனுப்பப்பட்டுளது. வின்சென்ற் டீ போல் சபையின் உபயோகத்தை. கத்தோலிக்க போதகத்தை நன்கறிந்த அயர்லாந்துமக்கள் ஆதரித்து வருவது ஆச்சரியத்துக்கு ஒன்றுமில்லை.

## இறுதிமட்டும் உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்

இம்மாதம் 25-ம் திகதி ஆங்கில-வேல்ஸ் தேச வேத சாட்சிகள் நாற்பதின்மருக்கு பரிசுத்த தந்தை அர்ச்சியசிஷ்ட பட்டம் அளித்ததற்கு முந்திய வாரம் இங்கிலாந்து மேற்றிராணிமார் தம் நாட்டு விசுவாசிகளுக்கு எழுதிய நிருபத்தில் வேதசாட்சி அர்ச்சியசிஷ்டர்களாக மகிமைப்படுத்தப்படும் நாற்பதின்மர்போல் ஒவ்வொரு விசுவாசியும் உண்மையை இறுதி மட்டும் கடைப்பிடிக்கத் தயாராயிருக்க வேண்டுமென வற்புறுத்தியிருக்கின்றனர். வேதசாட்சிகள் நம் மதத்தவர்களால் மாத்திரமன்றி, பிற மதத்தவர்களாலும் மதிக்கப்படுவதற்குத் தகுதியானவர்கள். இத்தகையோருக்கு இளைஞர் மத்தியில் வணக்கமும் மதிப்பும் ஏற்படுத்துவது பள்ளிக்கூட ஆசிரியர்களதும் பெற்றோர்களினதும் விசேஷ கடமை என்பது வற்புறுத்தப்பட்டது.

## அகதிகளும் வத்திக்கானும்

உலகநீதிக்கும், உலகசமாதானத்துக்குமாகப் பணியாற்றுதற்கென இருந்துவருகின்ற பாப்பரசர் குழுவின் செயலாளரான மொன்சிஞ்ஞோர் யோசெவ் கிறெமிலியன் சுவாமிகள் இசிறவேலின் ஆட்சிக்குள்ளான பகுதிகளிலிருந்து புகலிடந் தேடித் தப்பியோடியுள்ள 15லட்சம் மக்களுக்கு என்ன உதவி செய்யப்பட்டு வருகிறதென்பதைக் கண்டுகொள்ளுமாறு தற்போது பரிசுத்த நாட்டில் நிற்கின்றூர். இந்த அகதிகளுக்கு என்ன உதவி செய்யப்படவேண்டும் என்பது பற்றிக் கிறிஸ்ததலைவர்கள் அனைவருடனும் இவர் கலந்து பேசிவருகின்றூர். இந்த அகதிகளில் 10சத விகிதமானோரே கிறிஸ்தவர்கள். மத்தியகிழக்குப் பகுதிகளில் இருந்துவருகின்ற அகதிகள் சகலருக்குமே உதவிசெய்ய வேண்டுமென்பது வத்திக்கானின் நோக்கமாகும். இவர்களிலே தங்கள் நாட்டினைவிட்டு வெளியேறியவர்களும், அதைவிட்டு வெளியேற விரும்புகிறவர்களும் அடங்குவார்கள். பலஸ்தீனுவுக்கு உள்ளும் புறமுமாக இந்த அகதிகளைக் குடியேற்றி அவர்களுக்கும் புனர்வாழ்வளிக்கும் திட்டம் ஒன்றைச் செய்வதிலே வத்திக்கான் கருத்தாயிருக்கிறது.

**"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரே உங்களுக்குத்தான்

— எஸ். எம். ஜே.

1. "உனக்குக் குமாரருண்டோ? அவர்களுக்குக் கற்பித்துக்கொடு. இளமையிலேயே பணிதலில் அவர்களைப் பழக்கு" (சர்வப் பிரசங்கி 7: 25.)

2. "உன் குமாரனின் துர்மார்க்கத்தால் நீ அவமானப்படாதபடிக்கு அவனுக்குக் கற்பித்துக்கொடுத்து நன்மார்க்கத்தில் பழக்கு." (சர்வப்பிரசங்கி 30: 13.)

3. "துர்மார்க்கமான குமாரனால் தகப்பனுக்கு வெட்கமுண்டாகும். அத்தன்மையான குமாரத்தியோ அவமதிப்புக்குள்ளாவாள்." (சர்வப்பிரசங்கி 22: 3.)

4. பிரம்பால் அடிக்கப் பயப்படுகிறவன் தன்பிள்ளையைப் பகைக்கிறான். தன் பிள்ளையை நேசிக்கிறவனே கட்டாயமாய்ப் படிப்பிக்கிறான்." (கண்டித்துத்திருத்துகிறான் வேண்டியபோது(பழமொழி:13—24

5. "அடங்காத குதிரை மூர்க்கமாய்ப் போகின்றது. சுயஇஷ்டத்துக்கு விடப்பட்ட குமாரனும் துரிதமாய்ச் செல்லுவான். உன் குமாரனுக்கு மனப்பாலூட்டு; நீ பயப்படும்படி செய்வான். வாலிபத்தில் அவனுக்கு அதிகாரங் கொடாதே. அவனுடைய போக்குக்குப் போகவிட்டு உன் கண்களை மூடிக்கொண்டிராதே. வாலிபத்திலேயே அவன் கழுத்தை வளைத்து, சிறுவயதிலே அவன் பக்கங்களைப் புடை. இல்லாவிட்டால் கட்டுக்கடங்காமல் மூர்க்கனாகிவிடுவான். பின் உன்னைப் பொருட்படுத்த மாட்டான். அதனால் உனக்குக் கவலை உண்டாக்குவான்." (சர்வப்பிரசங்கி 31: 8, 9, 11, 12, 13.)

6. "குமாரத்தி தகப்பனுடைய தனிக்கவலையாய் இருக்கிறாள். அவளுடைய கவலையானது அவன் தூக்கத்தை நீக்கிவிடுகின்றது: ஏனெனில் வாலைப்பருவத்தில் கன்னிமை கெடக்கூடும்; மணமாகிப் புருஷனோடு இருக்கும்போது இதனால் வெறுப்புக்குள்ளாவாள். அவள் கன்னிமை கெடாதபடிக்கும், தகப்பன் வீட்டிலேயேகெட்டு கர்ப்பவதியாகாதபடிக்கும், புருஷனோடு வாழ்க்கையில் கட்டளை மீறாதபடிக்கும் அல்லது மலடியாகவே ஆகாதபடிக்கும் கவனமாயிரு." (சர்வப்பிரசங்கி: 42: 9, 10.)

7. "தந்தைமார்களே, உங்கள் பிள்ளைகள் மனத்தைரியமற்றுப் போகாதபடிக்கு அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்காதேயுங்கள்" (புனித சின்னப்பர் கொலோசியர் 3: 21.)

8. உங்கள் பிள்ளைகளுக்குப் புத்திமதி சொல்லி, அவர்கள் சன்மார்க்கத்தில் ஒழுகி, தருமஞ்செய்யவும், நிரந்தரமாய் சர்வசத்துவத்தோடும், உண்மையோடும் கடவுளை நினைத்துப் போற்றவும் வேண்டுமென்று எச்சரித்து வையுங்கள்," (தொபியாஸ் 14: 11.)

9. "தகப்பன்மார்களே! உங்கள் பிள்ளைகளுக்குக் கோபமூட்டாதிருங்கள். ஆனால், அவர்களை ஆண்டவருக்கேற்ற ஒழுக்கத்திலும், கண்டிப்பிலும் வளர்ப்பீர்களாக,"(எபேசியர்: 6: 4.)

மேலே கூறப்பட்ட வேத நூல் வார்த்தைகள் பொய்யா மொழிகள். அவை கடவுளின் ஏவுதலினால் கூறப்பட்டவை. சுமார் 2.000 ஆண்டுகளுக்கு முன்—கிறிஸ்து பிறப்புக்குப் பலநூறு ஆண்டுகளுக்குமுன் —எழுதப்பட்ட இவ்வார்த்தைகள் இன்றைய உலகுக்கும் சாலப் பொருந்தும். அவற்றின் ஆழநீளம், நியாயத்தன்மை உற்றுணரவேண்டியவை. இன்றைய பெற்றோரின் அசட்டைத்தனம், பாரகண்டிதம், மிதமிஞ்சிய இளக்காரம் என்பவற்றால் விளையும் அனர்த்தங்கள் யாவுக்கும் இவை மருந்தாகும்.

பெற்றோர் பிற்காலத்தில் கண்ணீரும் செந்நீரும் சிந்தி, கவலையும் கம்பலையுமாய், அமைதி இழந்து தம்பிள்ளைகளைப்பற்றிய கவலையால் உயிர் விடக்காரணம் என்ன? பிள்ளை வளர்ப்பில் தங்கடமையை நன்குஆற்ற முயற்சி செய்யாததேயாகும். இன்றைய உலகில் இளஞ் சமுதாயத்தின் அவலநிலைக்கு, ஒழுக்கக் கேட்டுக்கு, புரட்சிப்பாதைக்கு, சீர்கெட்ட வாழ்க்கைக்கு பெற்றோரும் காரணர் என்று துணிந்து கூறலாம். வளர்ப்புச் சரியாயிருந்தால் எல்லாமே சரியாய் இருக்கும். குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்பார்கள். அதைமாற்றி இல்லம் ஒரு பல்கலைக் கழகம் என்று கூறிவிடலாம். எதிர்கால உலகம் ஒவ்வோர் வீட்டுப் பிள்ளைகளிலேயே தங்கி உள்ளது. வீட்டிலே இளமையில் பயிலும் இளைஞர் கையிலேயே நாளைய உலகு தங்கி உள்ளது.

பயிற்சி, சிறுபாயத்திலிருந்தே வரவேண்டும். பிள்ளைகளின் பிற்கால நலனைமுன்னிட்டு, அவர்கள் மழலைமொழி பேசும் பருவத்திலிருந்தே பெற்றோருக்கு அமைந்து, பணிந்து நடக்கப் பயிற்றப்பட வேண்டும். நன்மை அன்றித் தின்மை செய்யமாட்டார்கள் பெற்றோர் என்ற நல்லெண்ணம் சிறுவயதிலேயே ஊட்டப்படவேண்டும். இதுதவறு, இப்படிச் செய்யக்கூடாது என்று பெற்றோர் கூறும்பொழுது பிள்ளை தனது நன்மைக்காகவே கூறப்படுகிறது என உணர்ந்து செயற்பட வேண்டும்.

பிள்ளைகளுக்கு கண்டிப்பு அவசியம்என்பதை(பழமொழி ஆகமம் 13: 24.) நன்கு வற்புறுத்துகின்றது. மிதமிஞ்சிய செல்வமும் இளக்காரமும் பிள்ளைகள் மனதில் ஒருவித தப்பெண்ணத்தை உண்டாக்கும். அவர்கள் போக்கிலே கட்டுப்பாடற்ற தன்னிச்சையான சுபாவம்வளர்ந்து வலுத்துவிடும். 13வயது தொடக்கம் 19 வயது வரையிலான விபரம் அறியும் பராயத்தில் தாம் நினைத்தபடி நடக்க முற்படுவார்கள். அப்பராயத்தில் தான் பெற்றோர் தாம் குழந்தைப்பருவத்தில் கட்டுமட்டாகப் பிள்ளைகளை வளர்க்கவில்லையே என்று கவலைப்படத் தொடங்குவார்கள்.

அன்பு இதயத்திலேயே இருக்கவேண்டும். ஆனால், கண்டிப்பும், தவறுசெய்யும் போது தண்டனையும்கொடுத்து அடிக்கும்போது அடித்து,அரவணைக்கும்போது அரவணைத்து நடத்தவேண்டியது இன்றியமையாதது. பந்தயத்துக்கு ஓடுவதற்கென்று குதிரைகள் பழக்கப்படுகின்றன அல்லவா? அவற்றைப் பழக்குவது ஒரு தனிக்கலை. அடித்து, முறித்து நொறுக்கிவிட்டால் அக்குதிரையால் பயன்தான் என்ன? பந்தயத்துக்கும் உதவாது; சவாரிசெய்யவும் உதவாது; வண்டி இழுக்கவும் வயல் உழவுந்தானும பயன்படாது. உற்சாகம், உள்வேகம், கம்பீரம் இல்லாத குதிரையால் யாது பயன்? இதேபோலத் தான் பிள்ளைவளர்ப்பும். திருத்துகிறோம், பழக்கிறோம், பயிற்றுகிறோம் என்று பிள்ளைகளின் மனதை இளமையிலேயே முறித்துவிடக்கூடாது. கோழைகள் ஆக்கி அவிவேகத்தில் பயிற்றக்கூடாது. கண்மூடித்தனமான, அர்த்தமற்ற அடக்குமுறை மிக ஆபத்தானது. வளரத்துடிக்கும், வாழத்துடிக்கும் இளம்பயிரை முளையிலே கிள்ளிவிடலாமா? இளமையிலேயே உள்ளத்தை நொருக்கிவிடலாமா? சில பெற்றோருடைய கண்டிப்பு மிருகத்தனமானது. நியாயத்துக்கு அப்பாற்பட்டது. சிலர் ஆராயாமல் கண்டிக்கிறார்கள். வேறுசிலர் எடுத்ததற்கெல்லாம் கண்டிக்கிறார்கள். தம்மை மறந்து, உணர்ச்சி வசப்பட்டு கண்டபடி சிறுவர்களைத் தண்டிக்கிறார்கள் வேறுசிலர். இதனால் சிறுவர் மனம் மரத்துவிடும்; வெறுப்பும் கசப்பும் உண்டாகும். தண்டனை சிலருக்குப் பழக்கப்பட்டுவிடுவதால் உணர்வு அற்றுப்போகும். அதாவது அடி விழுந்தால் விழட்டுமே என்ற மனப்பான்மை வைரித்து வளர்ந்துவிடும். இதுவும் தவிர்க்கப்பட வேண்டும்.

தங்கள் ஆடு எங்கே, மாடு எங்கே, கோழி எங்கே என்று அக்கறையோடு அவை இருக்குமிடம் நன்கு அறிந்திருக்கும் பெற்றோர் பலருக்கு அவர்கள் பிள்ளைகள் எங்கே என்று கேட்டால் இங்கே நின்றான், காணவில்லை என்று கூறுவார்கள். இத்தன்மையான பெற்றோர் எங்ஙனம் தம்பிள்ளைகள் நற்குண நல்லியல்புடையவராயிருப்பர் என்று எதிர்பார்க்க முடியும்? பிள்ளை எங்கே போகிறது? யாருடன் கூடுகிறது? என்ன படிக்கிறது? அவனுடைய கூட்டாளிமார் யார்? என்பன போன்ற காரியங்களில் கண்ணுங்கருத்துமாயிருத்தல் கடனாகும். அப்படியானால்தான் தாயானவள்:

"ஈன்ற பொழுதிற் பெரிது
வக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட
தாய்"

என்ற வள்ளுவர் வாசகத்துக்கு அருகதையாக முடியும்.

"அவையிடத்து முந்தியிருப்பச் செயல்" என்பது தந்தையின் கடனாகும். பிள்ளை தாயிடத்தில் அன்பையும் தந்தையிடத்தில் அறிவையும் பெற்று வளரவேண்டும். அன்னை

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# வத்திக்கான் றெயில்வே

வத்திக்கான் இராச்சியம் சர்வசுதந்திரம் — அதாவது இராசாதிபத்தியம் உடையதென்பதற்கான சிறந்த இலட்சணங்கள்பற்றிய சந்தேகத்துக்கிடமில்லாத சான்றுகளில் ஒன்று, அதன் புகையிரதப் பாதையாகும். அது நீளத்திலே அதிகம் குறுகியதாயினும், வத்திக்கான் இராச்சியத்தினுள் ஒரு சில நூற்றுக்கணக்கான யார்மட்டுமே நீளமுடையதாயினும் இத்தாலிய தேசிய புகையிரதப்பாதைத் திட்டத்துடன் இணைந்திருக்கும் காரணமாக, அது உலகின் சகல பகுதிகளையுமே போய்ச்சேருகிறது. 1929-ம் ஆண்டு இத்தாலிக்கும், பரிசுத்த ஸ்தானத்துக்குமிடையே நடந்தேறிய லத்தறன் உடன்படிக்கை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இதுவும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தினாலே பரிசுத்தஸ்தானத்தின் தனிஇராச்சிய சுதந்திரத்திற்கும், பாப்பரசரின் அரசுரிமை அந்தஸ்திற்கும் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.

இத்தாலிய — வத்திக்கான் புகையிரதப் பாதைகளுக்கிடையேயுள்ள எல்லைக்கோடை ஒரு பெரிய உருக்கிரும்புக் கேற் ஒன்று குறித்துக்காட்டுகின்றது. பாப்பரசர் நாட்டின் எல்லைக்குட்பட்டு அதன் ஓரமாயுள்ள மதிலின் இருபக்கங்களிலும் பொருத்தப்பட்டுள்ள இந்தக் கேற்றின் இருபாதிகளும் புகையிரதம் ஒன்று வந்து சேரும்போது அன்றேல் புறப்பட்டுப் போகும்போது மாத்திரம் இரண்டாகப் பிரிந்துபோய் மதிலினுள்ளே செருகிக்கொள்ளுகின்றன. இப்புகையிரதப்பாதை இரண்டேயிரண்டு முறை மாத்திரம் பிரயாணிகளைக் கொண்டு சென்றிருக்கிறது. மற்றப்படியெல்லாம் சாமான்களையே அடிக்கடி ஏற்றியிறக்குமதி செய்து புழக்கமடைந்து கொண்டிருக்கிறது.

ஆம், இரண்டேயிரண்டு முறை மாத்திரம் பிரயாணிகளைக் கொண்டு சென்றிருக்கிறது. இந்த இரண்டினுள்ளும் ஒன்றில் புனிதர்பட்டம் பெற்ற ஒரு அர்ச்சியசிட்ட பாப்பானவரும், மற்றதில் அநேகமாக ஏற்கனவே புனிதர்பட்டம் அருளப்படுவதற்கான உயர்பாதையில் சென்றுகொண்டிருக்கிறவரான ஒரு பாப்பானவரும் பிரயாணஞ் செய்திருக்கின்றனர்.

1959-ம் ஆண்டு சித்திரை மாதம் 11ஆம திகதியன்று ஒருமாதகாலம் தங்கியிருக்குமாறு வெனிஸ் நகருக்குப் புனித 10ஆம் பத்திநாதரின் அழிவைக் காணாத திருமேனியை 23ஆம் அருளப்ப பாப்பானவர் வழியனுப்பிவைத்த வைபவத்தின்போது முதற்பிரயாணம் நடைபெறலாயிற்று.

— "ஞானம்" —

1903ஆம் ஆண்டு 9ஆம் பத்திநாத பாப்பானவரிடமாகப் புதிய பாப்பானவர் ஒருவரைத் தெரிவுசெய்யுமாறு அழைக்கப்பட்டபொழுது, கருதினல்மார் திருச்சங்கத்திற்குச் சமூகமளிக்கும்படியாய் அப்போது வெனிஸ்நகரின பத்திரியாக்குவாக விளங்கியிருந்த கருதினல் ஜியுசெப்பி சாத்தோ ஆண்டவரை அந்நகரை விட்டுப்பிரிந்து செல்லுகையில் அளித்த ஓர் உறுதிவாக்கை நிறைவேற்று முகமாக நடைபெற்ற இந்த வழியனுப்பும் வைபவத்தை வெனிஸ்நகரமக்களில் அநேகர் கண்டுகளித்தனர். அவர் ஒருவேளை புதிய பாப்பானவராகத் தெரிந்துகொள்ளப்படலாமென்று அஞ்சிய வெனிஸ்நகரமக்கள் அவரைப் போகவேண்டாமென்று கண்ணீர் பெருக கையெடுத்து இரந்து நின்றார்கள். அப்பொழுது அவர் ஒரு தீர்க்கதரிசன வாக்குப்போன்று "நாம் உயிருடனோ அன்றேல் உயிரின்றியோ திரும்பி வருவோம்" என்று உறுதிவாக்கு அளித்துச் சென்றார்.

புனித 10ஆம் பத்திநாதரின் திருமேனியை வத்திக்கானிலிருந்து காலை 6-30 மணிக்கு வெனிஸ் நகருக்கு வழியனுப்பிவைத்த ஆடம்பரமான வைபவத்தின்போது, வெனிஸ் நகருக்குத் தாங்களும் திரும்பி வருவீர்களோ வென்று 23ஆம் அருளப்ப பாப்பானவர் கேட்கப்பட்டார். அவரோ உடனடியாக "இல்லை" என்று அழுத்தமாகப் பதிலளித்தார். மேலும் தமக்கு இயல்பாகவுள்ள நகைச்சுவையுடன் புகைவண்டியில் ஏற்றுவதற்காக அம்பொன்னால் அலங்கரித்து அழகு செய்யப்பட்ட புனித 10ஆம் பத்திநாதரின் பளிங்குத் திருமேனிப் பேழையைத் தூக்கிச் சென்றவர்களை விழித்து, இன்னும் சரிவரச் சொல்லுமிடத்து, நாம் எங்காவது போகிறதாயிருந்தால் அது உங்களுடைய உதவியில்லாமல் —அதாவது நீங்கள் தூக்கிச் செல்ல வேண்டியிராமல்தான் என்று விளக்கமாகக் கூறினார்.

இது நிகழ்ந்து மூன்று ஆண்டுகளின்பின் புனித 10ஆம் பத்திநாதரின் திருஉடல் வத்திக்கானிலிருந்து செல்லும் போது காணப்பட்ட ஆடம்பரமோ, ஆரவார உபசார வைபவமோ எதுவுமின்றியே 23ஆம் அருளப்ப பாப்பானவர் மறுவாரம் தாம் ஆரம்பிக்கவிருந்த இரண்டாவது வத்திக்கான் திருச்சங்கத்தின் அனுகூலத்திற்காக மன்றாடிவருமாறு லொறெத்தோ, அசிஸி எனும் யாத்திரைப்பதிகள் இரண்டிற்கும் ஒருநாள் யாத்திரை செய்வதற்கென்று வத்திக்கானின் கவர்ச்சிகரமான அழகிய மாபிள்கல் புகையிரத நிலையத்திலிருந்து புகையிரதமேறிச்சென்று தமது யாத்திரையை இனிதே முடித்தார். இவ்விரு சம்பவங்களும் வத்திக்கான் றெயில்வேயின் 40 வருடகால சரித்திரத்தில் பொன் அட்சரங்களால் பொறிக்கப்படத் தகுந்தன எனக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீருய்வு I "தொள்"

இஃது இதுகாறும் ஓரகராதியிலும் தோன்றுப் பதம்; தும்பளைக் கலாநிதியின் இவ்வகராதியில் முதன் முறை தோன்றும், அகராதி வரிசையில் என்க. சென்னையகராதியிற்றேன்றும் "தொள் (ளு) தல்" (பக். 2102) வேறு. அதனின் பொருள்: "துளைத்தல்"; "நெகிழ்தல்." அங்ஙனமே "தொள்கல்" = துளைக்கை, பக். 2103; "தொள்கு" = பள்ளம்; "தொள்ளம்" = தெப்பம்; சேறு. "தொள்ளல்" = துளை. "தொள்ளை" = "துளை, குழி, மரக்கலம், மரக்கால், குற்றம், அறியாமை", அதே பக்கத்தின் கண்.

ஆயினும் செ. அ. "தொள்ளாயிரம்" (= ஒன்பது நூறு) என்னும் தொடர்ச் சொல், இத் "தொள்" எனும் பதத்தினின்றே பிறந்ததென, மயக்கத்தினுல், கூறிற்று. அடையாளங்களை நோக்குமின்: "< id+" "id" = idem = அதிலிருந்தே". அதாவது பக். 2102. கடைசிச் சொல்லின் விளக்கத்தில் தோன்றும் "தொள்" = Perforating துளைக்கை; இதிலிருந்தாம் என்கின்றது. அன்புடையீர், இதுபொருந்துமோ? சொல்லீர். புணராக் கூற்று இஃதன்றோ?

30 ஆண்டுகளாகச் சிறுரைப் படிப்பிக்கும் பொழுது "அட்டாலும் பால் சுவையிற் குன்றாது" என எமக்கு முன் அநேகந்தரம் பாடினர். "சின்னத்தம்பி, முதற் சொலின்கருத்துயாது?" "Father எனக்கு விளங்க வில்லை; 'அட்டு' என யாம் வீட்டில், சொல்வதில்லை; 'வட்டு' எனவே கூறுகின்றோம்." மற்றவர்களின் சிரிப்பு உண்டாகும். ஆசிரியர்: "வட்டும், மட்டையும் இத்துடன் பொருந்தா. யேசுதாசன், நீ அடுப்பிலே உன்தாய் பாலை வைத்துப் பின் செய்வதைக் கவனித்தாயா?" "ஆம், Sir. பூனையைத் துரத்துவா; தங்கைச்சியை ஒதுக்குவா; பாலைக்காய்ச்சுவா." "சரி. அட்டாலும் என்றால் என்ன?" "Sir, Sir, Sir" என அநேகர் கையை உயர்த்துவர். 'பூதத்தம்பி, நீ சொல்லு.' "Sir, காய்ச்சினுலும்..." ஆசிரியர்: "நல்ல கெட்டிக்காரரின் வகுப்பு இது. ஒரு சொல் விளங்காவிடில், அதற்கு இனமான தெரிந்த சொற்களைப் பிடியுங்கள். இதுவே சுலபமாய்க் கண்டு பிடித்தற்கு வழியாகும்." அடுப்பும் அடுவும் மறவாதீர், மாணவர்களே."

யாமும் அங்ஙனஞ் செய்வோம். "ள்", "ண்" என்ற எழுத்துக்களைக் கடைக்கண்ணுல் பார்த்தாலே போதும்; நெருங்கிய உறவு இவை பூண்டவை. இஃதில் இரத்த உறவு: Consanguinity, ஆனதினுல் "தொண்டு" என்பதை எடுத்தால், அதனின் அக்காவாகிய "தொள்" கூடுதலாக விளங்கும். செ. அ. பக். 2091 "தொண்டு 3" = ஒன்பது. இது பண்டையப்பதம்: ஏனெனில், மலைபடுகடாம்21. "தொடுத்திரிவு அன்ன தொண்டு படுதிவவின்" = "தொடியினது உறழ்ச்சியை ஒத்த ஒன்பதென்னும் எண் உண்டான..." பரிபாடல் 3: 79 "ஆறு என, ஏழ் என, எட்டெனத் தொண்டு என" = "ஆறு, ஏழு, எட்டு, தொண்டு என்று எண்ணுகின்றார்," உரை. மேலும், தெலுங்கில் tommidi = 9; tommidava = ninth; tommanduguru = 9 persons; tombadi = 90; tombhai = 90, Galetti's Telugu Dictionary page 361. "தொடு, தொடர், தொடை, தொடி, தொடலை" என்பன தொல்லியக்கியங்களில் "இணைப்பதோடு" பொருந்திய பதங்கள்: இவைகளின் ஆக மூத்த அக்காவின் பெயர் "தொள்"; ஆனல் திருமடந்தையின் அக்காவாகிய மூத்தாளைப்போல, உண்மையில் அக்காவாயினும், "மூதேவி மூதேசி" அல்லள் இவள். சற்று விரிந்தால் 'தோள்' ஆக மாறுவள்: ஒப்பிடுக: புறநா. 61; 16 "எழுவுறழ் திணிதோள்." உம் உடலின்

கலாநிதி: தாவீதடிகள்

பெரும்பகுதியையும் உம் கைகளையும் இரு தோள்களும் இணைப்பதைக் கண்டு, இறைவனுக்கு நன்றி செலுத்துமின். ஆகவே, "தொள் என்றால், சின்னத்தம்பி, என்ன?" "Sir, இணைப்பது." "தொண்டை என்ன செய்கின்றது, வெலிச்சோர்?" "Sir, உள்ளுடலில், தலையைஉடம்புடன் இணைக்கின்றது." "இப்போது, யாவருக்கும்ஒருவினு. தொண்டு எவற்றை இணைக்கின்றது?" கலகநாசமல்லாத மௌநம் அவ்வகுப்பிற் பாவியது, 2 நிமிடங்களாக: அல்பினேத்தி விழுந்தாலும், கேட்கும். பின்பு ஒரு மாணவி மட்டும் கைகளை யுயர்த்துகின்றனள். சிறுமி; மங்கையர்க்கரசி; இருபெற்றேரும் ஆசிரியர்—ஆசிரியைகள், "மகள் அறிவு பெற்றோரின் அறிவன்றோ!" இது கலவன் பாடசாலை. வேலும் மயிலுமாசிரியர்: "மங்கையர்க்கரசியே, உனக்குத்தெரியுமானல், சொல்லு; வெட்கப்படாதே." "Sir may I came to the black-board, and will you please give me a piece of chalk?" இஃதெல்லாம் "in priceless English:" வெள்ளையர் நாணத்தக்க ஆங்கிலத்தில். "இவள்தான் அடுத்த பிரதம மந்திரியாவள்" என இயம்பி, ஆசிரியர் இவளின் விண்ணப்பத்தை நிறைவேற்றுகின்றனர். அவள் மளமளெனக் கரும்பலகையில்திருத்தமான எழுத்தில், வரைவதின் பிரதி இதுவே:

"1, 2, 3, 4, 5, 6, 7, 8 — ஓரிலக்க எண்கள்: 10 ஈரிலக்க எண். இவற்றை இணைப்பது 'தொண்டு.' "தொள்." = இணைப்பது.

10, 20, 30, 40, 50, 60, 70, 80—ஈரிலக்க எண்கள்: 100 மூவிலக்க எண். இவற்றை இணைப்பது தொண்ணூறு. "தொள் + நூறு > தொண்ணூறு,

100, 200, 300, 400, 500, 600, 700, 800—மூவிலக்க எண்கள்: 1000 நாலிலக்க எண். இவற்றை இணைப்பது தொள்ளாயிரம். "தொள் + ஆயிரம்" > தொள்ளாயிரம்.

எல்லோரும் பெரும் வியப்பு உற்றுப் பேசாதிருக்க இவளின் தமையன், குமாரசாமி, நகைச்சுவையுடன் கூறியதாவது: "இவள்தான் யாவரையும் இணைப்பவள்: சிங்களவரைத் தமிழருடனும், இன்னும் கூடக் கடினமான தொன்று, பொன்னம்பலத்தை எம் செல்வநாயகத்துடனும் இணைப்பவள் இவளே." ஆசிரியர் வேலும் மயிலும்: "அரசியே, இதெல்லாவற்றையும் எங்ஙனம் புரிந்தனை? யாரும் உனக்கு ஏற்கனவே சொல்லித் தந்தார்களா?" "என்ன, Sir? நீரே இப்பொழுதே படிப்பித்தீர், 'தொள்' = 'இணைத்தல்' என. யான் ஒரு தமிழ்ப்பெண் அல்லவா? ஏனையோர்க்கு நாலும் நாலுஞ் சேர்ந்தால் 'எட்டு'; தமிழர்க்கு அது '32' ஆகும்; மிகுதி அவர்களின் மூளையிலிருந்து வரும் ஆதலின், பக்கத்தில் அப்பொழுதுவந்த தேவராஜா சுவாமியார் சொல்வர் இலத்தீனில்: Intelligentibus pauca" = புலமையோர்க்குக் கொஞ்சமே போதும்." இவற்றைச் செவிமடுத்த "புத்த மித்திரன்" எனும் சிங்கள ஆசிரியர் "யான் சென்ற 40 ஆண்டுகளாக 30 மொழிகளைப் படித்து அவற்றில் ஆராய்ச்சி செய்து வருகின்றேன். ஆனல், திராவிடத்தில் காணப்படும் இங்ஙனமான தத்துவசாஸ்திர—விஞ்ஞான அமைப்பு வேறொருமொழியிலும் காணப்படவில்லையே. இதை யான் சிறிமாவுக்கும் படுடீனுக்கும் நாளை கண்டு காட்டப்போகின்றேன்." (தொடரும்)

# யேசுநாதரின் அறிவு

(வண. பிதா உவில் யேசுதாசன், ஓ. எம். ஐ.)

யேசுவின் அறிவு அளவில்லாததா அல்லது அளவுள்ளதா? சருவேசுரனுக அவருடைய அறிவு அளவில்லாதது. அதை அவர் தமக்குச் சித்தமானபொழுது பாவித்தார். உதாரணமாக தம்முடைய சத்துராதிகளுடைய இரகசிய எண்ணங்களை அறிய அதைப் பாவித்தார்.

அவருடைய மனிதசுபாவம் அவருடைய தேவசுபாவத்தோடு இரண்டாம் தேவ ஆள்த்தன்மையினுல் ஒன்றித்திருந்தாலும், இரு சுபாவங்களும் அவரில் கலக்காமல் இருந்ததுமன்றி அவர் தமது மனித சுபாவத்தில் பாவத்தைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் நம்மைப்போல் இருந்தார் (எபி. IV. 15). ஆகையால் அவருடைய மனித அறிவு உத்தமமானதாயிருந்தாலும் அளவுள்ளதாயிருந்தது. அளவுள்ள அறிவுக்கும் குறைவான அறிவுக்கும் இடையில் வித்தியாசம் உண்டு. அளவுள்ள அறிவில் இருக்கத் தேவையில்லாத காரியங்கள் இல்லாவிட்டாலும், இருக்கவேண்டியதெல்லாம் இருக்கும். ஆனல் குறைவான அறிவில் இருக்கவேண்டிய காரியங்களில் சிலது இல்லாமல் இருக்கும். குறைவான அறிவை அறியாமை அல்லது ஐமிச்சம் என்றும் சொல்லுகிறோம். யேசுவின் மனித அறிவில் அளவுஉண்டு, ஆனல் குறை, அறியாமை, ஐமிச்சம் இல்லை.

சில வேதபாரகரின் அபிப்பிராயத்தின்படி யேசு மனிதனுக பேரின்ப தேவதரிசனையை சரீர அழியாமை மகிமையோடு தமது உத்தானத்தின் போதுதான் பெற்றார். இது யேசு பூங்காவனத்தில் மனவேதனைப்பட்டதோடும், சிலுவையில் கைவிடப்பட்டதோடும், மறுரூபமானதோடும் இணங்குகிறது. சுவிசேஷத்தின்படி மறுரூபமானது ஒரு புதுமை. ஆனல் யேசு எப்போதும் பேரின்ப தேவதரிசனையை அனுபவித்திருந்தால், அதை மறுரூபமாகாத வேளையில் மறைப்பதுதான் ஒரு புதுமையாக இருந்திருக்கும். அவருடைய மனித சுபாவத்தின் பேரின்பபாக்கியம் பரிசுத்த திரித்துவத்தினத்தைப் போல அளவு கடந்ததல்ல.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மெசியாவின் பணிக்குத்தேவையான அறிவைத் தேவ வெளிப்படுத்தலினுலும் தேவ செலுத்துதலினுலும் பெற்றார். ஆகையால்தான் தாம் தமது பிதாவிடமிருந்து கேட்டதையே படிப்பித்தேன் என்றார் (அரு. XV. 15.) தாம் தேவசுதன் என்ற உணர்ச்சி அவருக்கு இருந்தது. ஆகவே "ஆபிரகாம் உண்டாக்கப்படமுன்பே நான் உள்ளேன்" என்றார் (அரு. VIII. 55.) அவருக்குக் கிடைத்த தேவ வெளிப்படுத்தலும் அளவுள்ளது. ஆனபடியால்தான் அவர் தமக்கு உலகமுடிவின் நாளும் நாழிகையும் தெரியாது என்றார்.

யேசு மனிதனுகச் சம்பாதித்த அறிவையும் வைத்திருந்தார். அதுவும் அளவுள்ளது. ஆகையால்தான் அது வளர்ந்துகொண்டிருந்தது. "யேசுவோ சருவேசுரனுக்கும் மனிதருக்கும் முன்பாக ஞானத்திலும் பிராயத்திலும் பிரசாதத்திலும் வளர்ந்து கொண்டுவந்தார்" லூ. II 52). அவர் தமதுசம்பாதித்த அறிவை 12 வயசில் வேதபாரகருக்கு முன்பாகவும், பின்பு சேசாருக்கு வரிப்பணம் கொடுக்கலாமோ என்ற கேள்வி கேட்டபோதும் காண்பித்தார். யேசுவுக்கு அளவற்ற மனித அறிவு இல்லாவிட்டாலும் மிகவும்உத்தம புத்தியும் அறிவும் இருந்தது. அவருடைய போதனை திறமையாயும் இணக்கமாயும் இருந்தபடியால் ஏககாலத்து இளைஞரோ முதியோரோ விளங்க ஏலுமாயிருக்கிறது. அவருடைய உவமைகள் மிகவும் உத்தமமானவை என்றும் அவைகளை இதுவரைக்கும் ஒருவரும் வெல்ல முடியவில்லை என்றும் ஓர் உலாந்தாக்கார நாஸ்திகன் சொல்லுகிறான்.

மேற்சொல்லப்பட்டதிலே இருந்து ஒரு பத்திரிகையிலே அச்சிடப்பட்டதும் கீழே கொடுக்கப்பட்டதுமான வசனம் படுபொய் என்று அறிந்து கொள்ளலாம்: "யேசுவுக்கு அறியாமையும் ஐமிச்சமும் இருந்தது மாத்திரமல்ல, அவர் தாம் தேவசுபாவத்தை யுடையவர் என்பதை ஒருபோதும் அறிந்ததுமில்லை என்று கத்தோலிக்கர் ஏற்றுக்கொள்ள முடியும்."

# தனயனின்.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நவ சந்நியாச மடத்தை அடைந்தோம் விரைவில். மடம் எப்படி இருக்கும் என நான் பலமுறை கற்பனை கட்டியதுண்டு. அவையெல்லாம வீண்கனவென உணர்ந்தேன். நரைத் தலையுடன், கண்ணில் கண்ணுடியுடன், நாற்பத்தைந்து வயதுடைய ஒரு மெல்லிய நீண்ட உருவம என் முன் தோன்றியது. அவரே என் ஆன்ம குரு, வழி காட்டி, எனக்குப் பயிற்சயளிப்பவரென அறிந்தேன. அவர் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். அவரின் பேச்சில் இனிமை ததும்பியது. கண்களில் பாசம் நிறைந்திருந்தது. சாப்பாட்டிற்கு என்னை அழைத்துச்சென்று பலபல பேசினர். பின் நான் களைத்திருப்பதால் ஓர் அறையில் ஆளைப்பாற விட்டார் அன்று முழுவதும்.

மறுநாள் காலை மணியடிக்கும் சத்தம் கேட்டது. பின் எங்கும் ஒரே அமைதி. பல குருக்கள், குருமாணவர் கோவிலுக்குச் செல்வதைக் கண்டுகொண்டேன். அரை மணித்தியாலத்தின் பின் மணியோசை கேட்டது. ஒரு மணித்தியாலச் செபம், பின் பூசைப் பலியில் மற்றவர்களுடன் நாறும் பங்கு பற்றினேன். நான் முன்பு ஒவ்வொரு நாளும் கண்ட பூசைதான். ஆனல் இங்கு ஏதோ புது மாதிரித் தெரிகிறது. அம்மா அதிகம் எழுதிவிட்டேன், செபம் செய்ய நேரமாகிறது. அடுத்த கடிதத்தில் இங்கு எனது வாழ்வைப் பற்றி வரைகிறேன். உங்கள் நினைவே இல்லாத நாள் இல்லையம்மா. நீங்கள் இல்லாமல் எப்படி வாழ்வேனே தெரியாது. ஆனல் என் குறிக்கோளை, என் அவாவை முடிப்பதற்கு ஆண்டவரும், அவரின் தாயும் உதவுவாரென நம்புகிறேன்.

இப்படிக்கு,
அன்பின் மகன், பாக்கியம்.




அன்புள்ள தம்பி, தங்கையரே வணக்கம் !

கார்த்திகைமாதம் 1-ந்தேதி சகல புனிதர்கள் திருநாள். 2-ந்தேதி சகல ஆத்துமாக்கள் திருநாள், கார்த்திகை முழுதும் உத்தரிக்கிற ஆத்துமாக்கள் வணக்கமாதம். இந்த மாதத்திலே அந்த ஆத்துமாக்கள் நமது உதவியை விசேஷவிதமாக இரந்து கேட்கிறார்கள். "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் இரக்கமடைவார்கள்" என்ற திருவாக்கை நினைவுகூரும்படி நம்மை இரக்கத்துடன் கேட்கின்றார்கள். கைக்கெட்டியது வாய்க்கெட்டாதவாறாய்க் கவலையுற்றுத் தாங்கொணாத வேதனை அனுபவிக்கிற தங்கள்மேல் கருணை கொள்ள மாட்டீர்களோவென்று காதலுடன் கேட்கின்றார்கள். அதனால் அவர்களின் அபயக்குரலுக்குச் செவிசாய்ப்போமாக. என்றைக்கும் — விசேஷமாய் இந்தக் கார்த்திகை மாதத்திலும் திவ்விய பூசையாலும், செப தபங்களாலும், தானதருமங்களாலும் அவர்களுக்கு அருந்துணை புரிந்து ஆறுதல் வருவிப்போமாக.

— அண்ணா

# மந்திரம் அறியாமல் தந்திரியானால்

(செல்வன் அ. அன்ரனி ஜெயறட்ணம் — மாதகல்)

ஓர் ஊரிலே சிவலிங்கம் என்னும் பெயருடைய ஒருவர் வாழ்ந்துவந்தார். அவருடைய மனைவியார்பெயர் அழகவல்லி. ஒருநாள் சிவலிங்கம் மனைவியிடம் கூறினார், தான் சாத்திரங் கற்று நிபுணராகவேண்டுமென்று. உடனே மனைவியார் அவருக்குப் போதுமான அளவு உணவும் தயாரித்துக் கொடுத்து பணமும் கொடுத்து அனுப்பினாள். அவர் அவைகளைப் பெற்றுக்கொண்டு மறுநாள் விடியற்காலை பஸ்ஸில் புறப்பட்டுச் சென்றுவிட்டார். அவர் ஒரு பிற ஊரில் தான் கொண்டுசென்ற உணவையும் பணத்தையும் செலவுசெய்து முடித்தபின் மனைவிக்குக் கடிதம் அனுப்பினார் எப்படித் தெரியுமா? தான் சாத்திரத்தின் எல்லாக் கலைகளையும் கற்றுவிட்டதாகவும், இனி தனக்கு நிகர் ஒருவருமில்லையெனவும், அதனால் நாளைக்குத் தான் வீடுவருவதாகவும் எழுதியிருந்தார். அவருடைய மனைவி அழகவல்லியும் தனது கணவர் வருவார் என்ற சந்தோஷத்தால் இனசனர் எல்லோருக்கும் தமது கணவர்சாத்திர நிபுணர் என்று கூறி அவருக்குத் தேவையான உணவுகளைச் சமைத்தாள். சிறிது நேரத்திற்குப்பின் அழகவல்லி தண்ணீர் எடுக்கச் சென்றுவிட்டாள் அதேவேளையில் சிவலிங்கர் வந்து அடுக்களையில் உள்ள உணவுகளை உடனே சென்று பார்வையிட்டு விட்டு உடுப்புகளைக் களையும்போது அழகவல்லி வந்தாள். சிவலிங்கர் தான் அப்போதான் வருபவர்போல நடித்தார். கணவரைக்கண்ட அழகவல்லி ஓ! சாத்திர நிபுணரே, வந்துவிட்டீரா? நீர் சாத்திரநிபுணரானால் இன்று எமது வீட்டில் என்ன கறி சொல்லும் பார்ப்போம் என்றாள். அப்போ சிவலிங்கம் ஒரு செருமல் செருமிவிட்டு:- கீரையும், முருங்கைக்காய்ப் பால்கறியும், கிழங்குச்சொதியும் அப்பளம் மிளகாய் பொரியலும் என்று கூறினார். அதைக் கேட்டு மனைவி மகிழ்ந்து தனது கணவனைப்பற்றி எல்லோருக்கும் புகழ்ந்தாள். சில நாட்களின்பின் ஒருநாள் கிழவன் ஒருவன் சிவலிங்கம் வீட்டில் நின்று ஐயா சாத்திரியாரே எனது கழுதைக் குட்டியைக் காணவில்லை, தயவுசெய்து எங்கே என்று சொல்லும் என்றார். அப்போ சிவலிங்கர் பயமிகுதியால் இப்ப சாத்திரம் கூறமுடியாது. நாளைக்காலை 6 மணிக்கு வாரும் என்றார். கிழவன் வீடுசென்ற கோரத்தொட்டு இவருக்கு நிம்மதியே இல்லை. இரவு 9 மணியளவில் பந்தங்களும் கட்டிக்கொண்டு காடு மேடு எல்லாம் சென்றார். அவரின் காலில் முள் தைக்காத இடம் ஒன்றுமேயில்லை. கடைசியாகக் கழுதை ஒரு இடத்தில்நிற்கக்கண்டு அதைப் பிடித்து ஒரு ஆலின்கீழ் கட்டிவிட்டு வீட்டிற்குச் சென்றார். அப்போ அவரது மனைவி இந்தச் சாமத்தில் எங்கே சென்றுவிட்டு வருகிறீர்கள் என்று கேட்க எனக்கு நித்திரை வரவில்லை; அதனால் உலாவிவிட்டு வருகிறேன் என்றார். மறுநாட் காலை கிழவன் வந்ததும் சிவலிங்கம் கூறினார்: சுடுகாட்டில் ஓர் ஆலமரத்தின்கீழ் உனது கழுதை கட்டிநிற்கின்றது என்றார். உடனே கிழவன் காசு 10 ரூபாவைக் கொடுத்துவிட்டுச் சென்றான். ஒரு சில மாதங்களின்பின் அவ்வூர் அரசன் சாப்பிடும் தங்கத் தட்டு களவுபோய்விட்டது. அதனால் அரசன் ஏவலாளிகளை அனுப்பினான் சிவலிங்க சாத்திரியாரைக் கூட்டிவரும்படி. ஏவலாளிகள் வந்து சிவலிங்கரைக் கூப்பிட்ட[illegible] அவர் மனைவியிடம் கூறி[illegible] ஏவலாளிகளுடன் சென்றார். அப்போ அரசன் சாத்திரியாரே எனது தங்கத்தட்டைக் காணவில்லை; எங்கே என்று சொல்லும் என்றார். அவர் உடனே அரசே இப்போ சாத்திரங் கூறமுடியாது; நாளைக் காலையில் தான் கூற முடியும் என்றார். அதனால் அரசன் அப்படியானால் நீர் இன்றைக்கு இங்கேயே தங்கும் என்றார். அதனால் சாத்திரியாருக்கு பயத்தால் காய்ச்சல் ஏற்பட்டுவிட்டது. அதையும் பொருட்படுத்தாது இரவு முழுவதும் அரண்மனையைச் சுற்றித் திரிந்தார். அப்போ அரசனின் ஏவலாளர்கள் சாத்திரியிடம் ஓடிவந்து ஐயோ சாத்திரியாரே, நாங்கள்தான் அரசரின் தங்கத் தட்டை எடுத்துக் கிணற்றடியில் புதைத்து வைத்திருக்கிறோம், அரசனிடம் எங்களைக் கூறவேண்டாம் என்றனர். அதனால் சிவலிங்கம் மகிழ்ந்து மறுநாட் காலை அரசனிடம் தங்கத்தட்டு கிணற்றடியில் இருக்கிறது என்று கூறினார். அதனால் அரசன் மனமகிழ்ந்து தனது இராட்சியத்தில் பங்கு கொடுத்து அரசாட்சி நடத்தும்படி வேண்டினான். சிவலிங்கரும் சம்மதித்துத் தனது மனைவியுடன் இராட்சியத்தில் பாதிப் பங்கை ஏற்று அர[illegible]

(வளரும்)

# தனயனின் கடிதம்

அன்புள்ள அம்மாவுக்கு!

உங்களைக் காணாமல் ஒரு கிழமை எப்படிச் சென்றதென எனக்குத் தெரியாது. முன்பு உங்களைப் பிரிந்து சில காலம் இருந்தது உண்மைதான்: ஆனால் சமுத்திரம் தாண்டி வேறொரு தேசத்திற்குச் சென்றது இதுதான் முதன் முறை. உங்களைக்காணாது இனியும் எப்படி இருப்பேனோ!

நீங்கள் என்னைப் பெற்றெடுத்த நாள் முதல் கண் இமை போலக் கனிவாய்க் காத்து வந்தீர்கள். நான் வெளியே போய்க் கால் தடக்கிப் புரண்டு விழாதபடி உங்கள் பாதுகாவலாகிய போர்வையுள் வைத்துக் கொண்டீர்கள். நான் அறியாப்பிராயத்திலே அப்பாவை இழந்துவிட்டாலும், அக்குறையை நான் உணரா வண்ணம் நீயே அப்பாவும் ஆனாய், அம்மாவும் ஆனாய், எத்தனையோ துன்பங்களிடையும் நீங்கள் என்னைப் பள்ளி அனுப்பி, எனக்குவேண்டிய அறிவைப் புகட்டினீர்கள். நீயே என் முதல் ஆசிரியர், ஆம், ஆவன்னாவை நீங்கள் என் கைவிரல் பிடித்து மண்ணில் எழுதுவித்தது இன்னும்என் நினைப்பில் இருக்கிறது. தாய்ப்பாலுடன் தமிழின் இனிமையை எத்தனை தாலாட்டுப் பாக்களால் எனக்குப் புகட்டினீர்கள்! எத்தனை கதைகளை எனக்கு இரவுபகலாகக் கூறினீர்கள்! அதுமட்டுமா! நான்சொல்லும்செபங்கள் அத்தனையையும் நீங்களல்லவா எனக்குப் படிப்பித்தீர்கள். நான் பருவம் அடைந்தவுடன், சம்மனசுகளின் இராசாவை நான் பெற்றுக்கொள்ளச் செய்தீர்கள். ஆம்! இத்தனை செய்த என் அம்மாவை எப்படிப் புகழ்வது? எப்படி அவருக்கு நன்றி சொல்வதென்றே எனக்குத் தெரியாதபமா? அம்மாவிடமல்லவா அதையும் கேட்கவேண்டும்?

நீங்கள் எனக்காய் எத்தனை தியாகங்கள் செய்தீர்களோ? நான் அறியேன். பட்டினி கிடந்தும் எத்தனை முறை உண்பதற்கு எனக்கு உணவு தந்தீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் நான் காணாமல் நீங்கள் செய்த தியாகங்கள் எத்தனையோ? கடவுளே அறிவார். நான் வியாதியாய் இருக்கையில், நான் கசப்பான மருந்தை விரும்பாதிருக்கையில் நீங்கள் எத்தனை தியாகங்கள் செய்தீர்கள்! நான் குணமடைவதற்கு எத்தனை நோத்துக்கள் செய்தீர்களோ! எத்தனை செபங்களைச் சொன்னீர்களோ! நான் விளையாட்டாய், குறும்புக்காரனாய் இருந்து சொற்படி கேளாமல நடந்தபோது நீங்கள் எவ்வளவு வருத்தம் அனுபவித்திருப்பீர்கள்! எவ்வளவு துன்பங்களையும் எனக்காய் அனுபவித்திருப்பீர்கள்.

நீங்கள் எனக்கென்று என்ன கோட்டை கட்டினீர்களோ நான்றியேன். நான் பெரியோனாய், நல்லவனாய் வர நீங்கள் விரும்பியிருப்பீர்கள், ஆனால் என் முடிவை நான் கூறியவுடன் உங்கள் முகமலர்ச்சியை நான் காணாமல் இருந்ததில்லை, இவ்வளவு நாளும் எனக்காயத் தியாகம் செய்த தியாகத்தின் செம்மல் நீங்கள். இப்பொழுது என்னைக் கடவுளுக்கு அர்ப்பணித்ததைப்பற்றி நான் ஆச்சரியப்படவில்லை. உங்கள் தியாகத்தின் பரிசுதான் கடவுள் எனக்குக் கொடுத்த இப் புனித அழைத்தல் என எண்ணுகிறேன்.

அம்மா நாம் ஏழைகள். ஆனால் நான் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடியை அடைந்ததும, நாம் நூறு மடங்கு பணக்காரர் என எண்ணலானேன். அங்கே நின்ற ஏழைகளிற் சிலர் கந்தற் துணியுடன் இரு ஆடையற்ற குழந்தைகளை தம அக்கத்திற் சுமந்து கொண்டு "ஐயா, இலங்கைக் காசாவது ஒன்று கொடுங்கள்" என்று அழாமல் அழுதனர். நாம் ஏழைகளாய்ப பிறந்ததையிட்டு நான் குறை கூறவில்லை, மனம் நோகவில்லை அம்மா.

மூன்று நாள் பயணத்தின் பின சரியாய்க் களைத்து விட்டேன் என்று நான கூறவும வேண்டுமா அம்மா! மலையாள தேசத்திலுள்ள கலிகட்டு என்ற இடத்திற்குப் 12-30 மணி போல நான போய்ச்சேர்ந்தேன. அங்கே சகோதரர்ஒருவா இன்முகத்துடன காத்து நின்றா, என்னை அறியாராகையால், அவா வருபவார் போவோரைப பார்த்துக் கொண்டிருந்தார், நான அவரை அடைந்து, நான் இலங்கையிலிருந்து வருவதாகவும், கலிககட்டு நவ சந்நியாச மடம் போக வேண்டும் எனறும கூறினேன். உடனே அவர் முகம பூரித்தது. அவர் தான் என்னை அழைக்க வந்தவரெனப் பின் அறிந்தேன. அவர் என்னை அழைத்துச் சென்றார். இரண்டரைக் கட்டை காரில் பிரயாணம் செய்தோம். நம் நாட்டைப் போன்று மிகவும் சூடாய் இருந்தது. தெருவில் அவ்வளவு மக்கள் நடமாடவில்லை. அகல வீதி. தென்னை மரங்கள் அதிகம் தென்பட்டன.

[மூன்றும்பக்கம் பார்க்கவும்]

## தவிப்பு

அன்னாய்! என்றழைத்தேனே யார் வந்தது?
அண்ணாவோ! என்றலற யார்வந்தது?
பொன்னே என்பூவே என்றழைத்தோர் எங்கே?
புலம்பியழும் வேளையிலே யார்வந்தது?

தந்தாய்! என்றழைத்தேனே யார்வந்தது?
தஞ்சமென நெஞ்சிளகி யார்வந்தது?
மைந்தா! என்றழைந்தேனே யார் வந்தது?
மகளே! என்றழைத்தேன யார் வந்தது?

அன்பே! என்றழைத்தேனே யார் வந்தது?
அன்பரெலாம் எங்குற்றார்? யார் வந்தது?
துன்பத் துயர்க்கடலில் யார் வந்தது?
துணையாக எனைத்தேடி யார் வந்தது?

தங்கையோ தம்பியோ யார் வந்தது?
தனிமையிற் கைதூக்க யார் வந்தது?
பொங்கும் கவலையில் யார் வந்தது?
புழுவாய்த் துடிக்கையில் யார் வந்தது?

உற்றார் உறவோர்கள் யார் வந்தது?
ஒருவீட்டில் வாழ்ந்தோர்கள் யார் வந்தது?
கற்றகலைக் கூடத்தோர் யார் வந்தது?
கதறியழும் என்னருகே யார் வந்தது?

கூப்பிட்ட குரலுக்கு யார் வந்தது?
குமுறியழும் எனைநோக்கி யார் வந்தது?
காப்பிட்ட சிறைதன்னில் யார் வந்தது?
கண்ணீரைக் கண்டுருகி யார் வந்தது?

—[ யாழ். ஜெயம் ]—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதரே புனிதர் — இ. பேர்னட்

வருடத்தில் தினம் தினம் குறிக்கப்பட்ட சில புனிதரின் விழாவைக் கொண்டாடும் திருச்சபை கார்த்திகை மாதம் 1ஆம் திகதி சகல புனிதருக்கும் விழா எடுக்கிறது. அன்றையதினம் விசேடவிதத்தில் அவர்களை நினைவுகூர்ந்து அவர்களின் அருளைப்பெற விழைகிறது. மனிதனும் புனிதனாகலாம் என்ற தத்துவத்தை உணர்த்துகிறது.

புனிதர் என்போர் யார்? விண்ணிலிருந்து விழுந்தவர்களா? மண்ணிலிருந்து மாயமாகத் தோன்றியவர்களா? தெய்வலோகத்துத் தெய்வீகப் பிறவிகளா? இல்லவே இல்லை. எம்போன்று மண்ணிலே பிறந்து, தாயின் மடியிலே தவழ்ந்து மழலைபேசி சிறுவராய் வாழ்ந்து இளைஞராய்த் திகழ்ந்து பெரியோராய் வாழ்ந்த மனிதப்பிறவிகளே. இவற்றை நாம் மறந்துவிடுகிறோம்.

பிள்ளைகளுக்குப் புனிதரின் பெயர்களையே இடவேண்டுமென திருச்சபைத்தாய் விரும்புகின்றாள். ஆனால் பழங்காலத்திலிருந்துவந்த இந்த நல்ல வழக்கம் இன்று மறைந்துவருகிறது. இன்றைய நாகரிகம் சினிமா நடிகரின் அல்லது நடிகையின் பெயரைச்சூட்டுவதுதான். ஏன் என்று கேட்டால் இன்றைய நாகரிகப்போக்கு இதுதான் என்பார்கள். என்ன அறியாத்தனம்? மனிதனே புனிதன் என்பதை அறிந்திருப்பார்களானால்......

ஓ...கோ... புனிதரின் பெயரை வைத்துவிட்டால் அனைவரும் புனிதராகிவிடலாமென்று நான் கூறவில்லை. புனிதரின் பாதுகாவலை எமக்களித்திருப்பது குறிப்பிட்ட புனிதரின் வாழ்க்கையை நாமும் பின்பற்றிப் புனிதர் ஆகவேண்டுமென்னும் நோக்குடனே திருச்சபை இதனை விரும்புகிறது. மேலும் ஒவ்வொரு பங்கிற்கும் ஒவ்வொரு புனிதர். பங்குமக்கள் அந்தந்தப் பாதுகவலரின் பாதுகாவலில்வாழ்கின்றனர். இத்துடன் திருச்சபை நின்றுவிடவில்லை. புனிதர் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விசேஷ துறைக்குப் பாதுகாவலாக நியமித்துள்ளது.

மேலும் புனிதரின் வாழ்க்கை வரலாறுகள் எம் வாழ்வை மாற்றும் சிறந்த சாதனங்களாகும். அவர்களின் வாழ்க்கைவரலாறுகளைப் படிப்பதன்மூலம் அவர்களின் வாழ்க்கை—அவர்கள் ஒழுகியவழிகள்—கைக்கொண்ட புண்ணியங்கள்—என்பவற்றை நாமும் பின்பற்றி நடந்தால் அவர்களைப்போன்ற புனிதத்தன்மையை நாமும் பெறமுடியும்.

புனிதர் என்பது கிறிஸ்துவுக்காக வாழ்ந்து அவருக்குச் சாட்சிகளாக மரித்துப் புனிதர் என்ற பட்டம் பெறுபவர்கள் மட்டுமல்ல, தூயவாழ்வு வாழ்ந்து வாழ்வின் முடிவில் முடிவில்லாப் பேரின்பம் துய்ப்பவர்கள் அனைவரும் புனிதரே.

விசுவாசிகளாகிய நாமும் அர்ச்சியசிட்டவர் என்று அழைக்கப் பேறுபெற்றவர்கள். ஏனெனில் ஞானஸ்நானத்தினால் அர்ச்சிக்கப்பட்டு பரிசுத்த சீவியம் நடத்த அழைக்கப்பட்டிருக்கிறோம் புனித சின்னப்பர் கிறிஸ்தவர்களை 'அர்ச்சியசிட்டர்கள்' (புனிதர்கள்) என்று அழைக்கிறார். (உரோ. 1:7) (1கொரி. 1 : 2)-

கார்த்திகை 1ஆம் திகதியில் மட்டுமல்ல தினமும் திருச்சபை புனிதரின் திருநாட்களைக் கொண்டாடும் நோக்கம் இதுவே. எனவே மனிதராகிய நாம் புனிதவாழ்க்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். இதனை நாம் நினைவிற்கொண்டு வாழ்வோமானால் உண்மையில் நாம புனிதராக மாறலாம்.

மனிதனே! நீ ஒரு புனிதன் மறவாதே. புனிதவாழ்க்கைக்கு இவ்வுலகிலே உன்னையே ஆயத்தம்செய். புனிதரின் உறைவிடமான பரலோகத்தின் கதவு உன் வருகைக்காகத் திறந்துவிடப்பட்டிருக்கிறது. மறவாதே.

மனிதன் என்பவன் புனிதன் ஆகலாம். —இ.பேர்னட்

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திரு இருதய இரக்கத்தினாலும். பரி. தேவதாயாருடைய வேண்டுதலினாலும், புனிதர்களான மார்கிறேற் மரியம்மாள், ஜெட்றூட் அம்மாள், விறிசிற் அம்மாள், றீற்றம்மாள் இவர்களுடைய மன்றாட்டினாலும், வண. பியோ சுவாமி அவர்களுடைய உதவியினாலும் எனக்கேற்பட்ட கடின வியாதி சத்திர சிகிச்சையின்றி குணமாகியதையிட்டு இந் நன்றியைப் பிரசுரிக்கிறேன். இவர்களுடைய நாமம் என்றும் புகழப்படுவதாக.

ஓர் அடியாள்

138|70

---

திருவாளர்

எஸ். சந்தியாப்பிள்ளை

அவர்கள் அமரத்துவமடைந்த

## 2-ம் வருட ஞாபகம்

தோற்றம்: 5-3-1888 மறைவு: 31-10-1968

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்."

எங்களுக்கு அன்புசெய்து எங்களால் என்றும் மறக்கமுடியாத விதமாய் எங்களுடன் வாழ்ந்து எங்களை விட்டுப் பிரிந்து 31-10-68ல் இறைவனடி சேர்ந்த திரு. எஸ் சந்தியாப்பிள்ளையின் ஞாபகார்த்தமாக அன்று சனிக்கிழமைகாலை 6-30மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் துக்கப்பாடற்பூசையும், வவுனியா புனித அந்தோனியார் தேவாலயத்தில் பூசையும் ஒப்புக்கொடுக்கப்படும்.

இதைக் கண்ணுறும் அன்பர்கள் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி. பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்:

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி: திருமதி அந்தோனியாப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை.
மக்கள்: வண, S. E. விஷயரெட்னம், O. M I., சங். சிஸ். மேரி ஜெறடீன், H. F., திரு. S. J. நவரெட்னம், O. A., கல்விக் கந்தோர், வவுனியா.
மருமகள்: திருமதி M. J. நவரெட்னம் ஆசிரியை இறம்பைக்குளம் மகா வித்தியாலயம், வவுனியா.
பேரப்பிள்ளைகள்: டாக்டர் Mrs. மேரிறீற்ரு செகராசிங்கி, டாக்டர் Miss. மேரி திரேசா சவிரிமுத்து, செல்வி சந்திரிகா நவரெட்னம், செல்வன் பிறெடிறிக் நவரெட்னம், செட்றிக் நவரெட்னம், பற்றிக் நவரெட்னம்.

வல்வெட்டித்துறை

---

### நன்றியறிந்த தோத்திரங்கள்

சகாயமாதா, லூர்துமாதா, செபமாலைமாதா, புனித அந்தோனியார், புனித செபஸ்தியார், யூதாதேதயு, திரேசம்மாள் இவர்களின் மன்றாட்டினால் நான் கேட்டகாரியம் கிடைக்கப் பெற்றேன். இவர்கள் நாமம் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்.

* * *

மருதமடுமாதா, சகாயமாதா, புனித அந்தோனியார், ஆக்னெல் அடிகள் ஆகியோரின் மன்றாட்டினால் எனக்கேற்பட்ட நெருக்கடி என்னைவிட்டு அகன்று போனமைக்கு நன்றியாக இதனைப் பிரசுரிக்கிறேன்,

ஓர் அடியான்

---

✝

### செல்வி செபரெட்ணதேவி

தோற்றம்: 6-5-1955 மறைவு: 3-11-1963

## நினைவு தினப்பா

சீர்பல வமையச்
செல்வங் கொழிக்க
ஏர்வளம் மலிய
வெழிலொடு மிளிருந்
தேன்நிகர் சுவைசேர்
தெண்ணீர் வாவியுள்
மீனினங் கீத
மிசைத்திடு மினிய
மட்டு நகரெனும்
மாண்புறு பதியினில்
இட்டமாய் வாழு
மின்னிசை யேந்தல்
நற்கிற கோரியும்
நயம்பொலி மாது
சற்குணம் மிக்க
லூர்த்தம் மாளும்
ஆற்றிய தவத்தால்
ஆண்டவ னருளால்
தோற்றிய செல்வி
செபரெட்ண தேவி
மூன்று பதினொன்
றறுபான் மூன்றினிலே
ஈன்றவர் கதறச்
சேர்ந்தன ளிறையடி
அன்று தொட்டே
அன்னவள் பிரிவால்
துன்ப மெய்துந்
தூய பெற்றோரும்
ஜெருமொடு,
தயாள குமாரி ஜோன்சன்
பீலிக்ஸ் சேவியர்
ரஞ்சனி என்னும்
ஆறுநற் சோதரர்
சோதரி களுமே
கூறுமிந் நினைவு
தினமெனு மின்று
நினைவு கூர்ந்து
நிர்மலன் யேசுவின்
இணையடி தொழுது
ஏத்துகின் றனரே!

மட்டக்களப்பு,
17-10-70.

---

## சருவேசுரனுடைய,...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள், ஏனெனில், வேதப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் இதுவே" என்று கற்பனையின் பாதையில் கொண்டுவந்து நிறுத்துகிறார். அத்துடன் நின்றுவிட்டாரா? இல்லையே! சருவேசுரனுடைய இராட்சியத்தைத் தேடுவது இலகுவான காரியமல்ல. நெருக்கமான, ஒடுக்கமான, கஷ்டமான சிறுவையின் வாசல்வழியாகத்தான் நித்திய சீவியத்தில் பிரவேசிக்க வேண்டும். கேட்டுக்குச் செல்லும் பாதையோ, விசாலமானது, அகன்றது, இலகுவானது என்றும் விளக்குகிறார். ஆம, சருவேசுரனுடைய இராட்சியத்தைத் தேடும் நீதிமான்களுக்கு அநியாயத் தீர்ப்புகள், நியாயமற்ற கண்டனங்கள், அவசியமற்ற சமுசயங்கள், காய்மகாரத்தின் சதிகள் காத்திருக்கும், குறுக்கிடும் என்பது நிச்சயம். ஆயின் இவ்வித எதிர்ப்புகளினால் மனம் சோராது, வீசும்காற்றில் பறக்கவிட்டு, தன் பரலோக பிதாவின் அழைப்புக்கிணங்கி, அவரில் நம்பிக்கைவைத்து அவர் சித்தத்தைநிறைவேற்றுவோர் கற்பாறையின்மேல் தன் வீட்டைக் கட்டியெழுப்பின விவேகமுள்ள மனிதனுக்கு ஒப்பாவான்.

— நாதன்

---

## கல்வி உதவி அமைச்சர் விஜயம்

உதவிக் கல்விஅமைச்சர் திரு. துடாவை இளவாலைக்கு விஜயஞ் செய்தபோது இளவாலை மகா வித்தியாலயத்தில் பெற்றோர் ஆசிரியர் சங்க சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது. மேற்படி பாடசாலை மாணவிகளின் வரவேற்புக் கீதமும் பேச்சும் இடம் பெற்றன.

பாடசாலைத் தேவைகள் பற்றிய மகஜர் ஒன்று மந்திரியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. பாடசாலை 'பாண்ட்' வாத்தியக்கோஷ்டி சகிதம் மந்திரி ஊர்வலமாகப் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டார்.

மந்திரி தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிகூறிப் பேசுகையில்: புதிய கல்வித்திட்டம் ஒன்று விரைவில் அமுலுக்கு வரும் என்றும் அனைவரையும் அதற்கு ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

மேற்படி பாடசாலை மாணவிகளின் நடனநிகழ்ச்சியை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

வெளிவைபவம் ஒன்றில் முதல் முறையாகக் கலந்துகொண்ட பாடசாலை 'பாண்ட்' கோஷ்டியினர் அனைவரின பாராட்டுக்களையும் பெற்றனர். பண்டத்தரிப்பு கிராமசபை அங்கத்தவர் திரு. இராசநாயகம் வரவேற்பிற்கான நடவடிக்கைகளைக் கவனித்தார்.

—'திராட்சையூரான்

---

## பெற்றோரே ...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

யும் பிதாவும் பிள்ளைகளுக்கு முன்னறியும் தெய்வங்களாக விளங்கி வாழ்ந்து காட்டவேண்டும். அன்றுடம் தம் முன்மாதிரிகையால் நல்ல எடுத்துக்காட்டாகத் துலங்கவேண்டுவது முதற்கண் அவசியமாகும். கிறிஸ்தவ குடும்பங்கள் ஏனைய குடும்பங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். பரஸ்பர அன்பு, நல்லெண்ணம், பிறர்சிநேகம், விட்டுக்கொடுக்கும் மனோபாவம் தாய்தந்தை, பிள்ளைகளிடம் மிளிரவேண்டும். பிள்ளைகள் தம்பெற்றோருக்குப் பணிந்து, அமைந்து, அவர்களைச் சங்கித்து மதித்து வாழ்ந்தால்தான் அதே அன்பு, சங்கை, அமைச்சல் என்பவற்றை தங்கள் பிள்ளைகளிடமும் எதிர்பார்க்க முடியும். இன்றைய வயதுவந்த பிள்ளைகள் நாளை தாம் பெற்றோராகும் பொழுது தங்களுக்குப் பிறக்கப்போகும் பிள்ளைகள் ஒழுக்கமும், பணிவும் உடையவராய் இருக்கவேணடுமென்று ஆசிக்கிறார்கள். அப்படியாயின் அவர்கள் தங்கள் பெற்றோருக்கு இதே கடனைச் செலுத்தவேண்டுமல்லவா?

"தன் தாயைச் சங்கிக்கிறவன் திரவியங்களைச் சேகரிக்கிறான். தன் தந்தையைச் சங்கிக்கிறவன் மக்களால் சந்தோஷமடைவான். அவன் வேண்டுதலும் கேட்கப்படும். தன்தந்தையைச் சங்கிக்கிறவன் நெடுங்காலம் வாழ்வான்" (சர்வப்பிரசங்கி 3: 5, 6, 7,). இவ்வார்த்தைகள் நாளைய பெற்றோராகப்போகும் இன்றைய இளைஞருக்கு என்றும் ஒலித்துக்கொண்டிருக்க வேண்டும்.

---

# கருஅழிப்பு, இரக்கக்கொலை இரண்டும் படுபாதகங்கள்

வாஷிங்டன் நகரில் மிக அண்மையில் மகாநாடு கூட இருக்கும் கத்தோலிக்க வைத்திய விற்பன்னரின் சங்கக் காரியதரிசியாகிய டக்டர் ஜேம்ஸ் பெர்லிகியா அவர்களுக்குப் பரிசுத்த தந்தை மிக முக்கியமாக அவர்கள் ஆலோசிக்க இருக்கும் சில கருமங்களைப்பற்றித் தனது அபிப்பிராயத்தை சந்தேகத்துக்கு இடமின்றி அரசாங்க கருதினல் விலோ அடிகள் மூலம் அறிவித்திருக்கிறார். கரு அழிப்பு, இரக்கக் கொலை ஆகிய இரண்டும் ஆதிகாலந் தொடக்கமாகத் திருச்சபை படு பாதகங்களெனவே போதித்திருக்கின்றது. அதை மாற்றிக் கொள்வதற்கு யாதொரு நியாயமுமில்லை. "தற்பாதுகாப்புக்காக ஒரு மனித உயிரை அழிக்கலாகுமே தவிர வேறு காரணங்கள் அதற்கு இடம் கொடா" எனத் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார். ஆனால் மாற்ற முடியாத சில வியாதிகளின் இறுதிக் கட்டத்திலிருக்கும் நோயாளருக்கு விசேஷ மருந்துகள் கொடுத்து உயிரைக் காப்பாற்றி வைக்க கத்தோலிக்க வைத்தியர்கள் கடமைப்பட்டுள்ளார்களா என்பதை முடிவு செய்ய வைத்தியர்களின் மனச்சாட்சியே உதவவேண்டுமெனவும் அவர் கூறியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

**கார்த்திகை — 1970**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஞாயிறு | சகல புனிதர்கள் | [ப] |
| 2 | திங்கள் | சகல ஆத்துமாக்கள் | [ஊ] |
| 3 | செவ்வாய் | தினப்பூசை | [ப] |
| 4 | புதன் | புனித சாள்ஸ் | [வெ] |
| 5 | வியாழன் | தினப் பூசை | [ப] |
| 6 | வெள்ளி | ,, | [ப] |
| 7 | சனி | ,, | [ப] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# நினைவுகூர்வோம்

உலக வாழ்விலிருந்து மறைந்தோரை எவ்வளவு விரைவில் மறந்துவிடுகிறோம். வாழ்வில் எம்மோடு ஒன்றித்து நெருங்கிய அன்பு பூண்டிருந்தவரைக்கூட மரணத்திரை கவர்ந்தபின் மறந்துபோய், அவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபம் செய்யக்கூட மறந்துவிடுகிறோம். உலக வாழ்வின் சந்தடிகளில், ஓயாத பிரச்சினைகளில், தீராத கவலைகளில் இறந்துபோனவர்களைப்பற்றி எண்ணிப்பார்க்க அவகாசம் தான் உண்டா?

இவ்விதமாகத் தன் அங்கத்தவர்களில் ஒருபகுதியினர் புறக்கணிக்கப் படக்கூடும் என்ற காரணத்தினலேயே திருச்சபை அவர்களை நினைவுகூருவதற்கென ஒரு மாதத்தையே ஒதுக்கியுள்ளது. மரித்த விசுவாசிகள் எமது சகோதரர், கிறிஸ்துவோடு அவரது மறையுடலில் இணைந்தவர்.

மரித்தவர்கள் என்னவிதமான நிலையில் இருக்கிறார்கள் என்பது எமக்குத் தெரியாத பரமரகசியம். ஆனால் அவர்கள் உலகில் எம்மோடு பொதுவான ஒரு வாழ்க்கை நடத்தியவர்கள். ஈடேற்றம் அடைந்திருப்பார்கள் என்றே நம்புவோம். புனிதர்களைப் போலவே தமது உலகவாழ்வை வெற்றிகரமாக முடித்து, நித்தியவாழ்வின் முதற்படியில் அடியெடுத்து வைத்தவர்கள். இறுதியான சுத்திகரிப்பில் தரித்து நிற்கும் அவர்களுக்கு இறைவன் அண்மையிலிருக்கிறார் என்ற எண்ணம் ஒருபெரும் ஆறுதலாக இருக்கும்.

உத்தரிப்பு நிலையிலுள்ள ஆத்துமாக்கள் நிச்சயமாக இறைவனது கொடையை ஏற்கத் தீர்மானித்தவர்கள். இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள். ஆயினும், அவரோடு ஒன்றிப்பதற்கு அவர்களின் மாசுகள் தடையாக இருக்கின்றன. தான் இருக்க வேண்டிய நிலைக்கும் (அதாவது இறைவனோடு ஒன்றிப்பு) அந்நிலையை அடையமுடியாது தற்போது தடுத்து நிற்கும் பாவங்களுக்கும் இடையேயுள்ள முரண்தான் அவர்களது பிரதான வேதனையாகும், அவர்கள் இறந்தபோதிலும் எம்மைவிட்டு முற்றாகப் பிரிந்துவிடுவதில்லையாதலால், இறைவன் தமது அளவற்ற அன்பின் செயலால் அவர்களை விரைந்து தூய்மைப்படுத்துமாறு வேண்டிக்கொள்வது எம் கடமையேயாகும். இறந்தோருக்காக வேண்டிக்கொள்வது நன்மையும் பரிசுத்தமுமான செயலாகும் என வேதாமம் கூறுகிறது. இந்த ஆத்துமாக்களிடம் இறையன்பு பூரணமாக ஆட்சிசெலுத்துமாகையால் அவர்கள் தம் வேதனைகளைப் பொறுமையுடன் சகித்துக்கொள்வார்களெனினும் இறைவனை அடையும் நாளை ஏக்கத்துடன் எதிர்பார்த்தவண்ணமாயிருப்பர். இறந்த ஆத்துமாக்களுக்குரிய கார்த்திகை மாதத்தில் விசேஷ விதமாக உத்தரிக்கும் எமது சகோதராகளோடு ஐக்கியமாகி எமது கிறிஸ்தவ வாழ்வை அவர்களுடன் பகிர்ந்துகொள்ளவேண்டும். அவர்கள் விடுதலைபெறுவதற்கு உதவி அவர்களோடு சேர்ந்து இறைவனை மகிமைப்படுத்த வேண்டும்.

---

தோல்வி உள்ளத்திறனைக் காட்டும் ஒரு வாயில். உற்சாகமற்ற நாட்களுக்கு அது சுவையூட்டுகிறது. இரத்தத்திற்கு உரமூட்டுகிறது. கடுமையான வேலைகளுக்குப் பொலிவூட்டுகிறது. வெற்றி சிறப்புடையது தான். ஆனால், தோல்வி அதைவிடச் சிறப்புடையதாக அமையலாம். —ஹெலன் கெப்பர்.

---

# "சருவேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் முந்த முந்தத் தேடுங்கள்! அப்போது சகலமும் உங்களுக்குக் கொடுக்கப்படும்."

**(புனித மத். 6-ம் அதி. 33-ம் வச.)**

நம் அன்பின் மீட்பர் தமது மலைப்பிரசங்கத்தைத் தொடர்ந்து, இவ்வருள் வாக்கையும் கூறினார். நாம் மலைப்பிரசங்கத்தில விசேஷமாக அவர் கூறிய எணவகைப் பாக்கியங்களைப்பற்றித் தியானிக்கிறோம், ஆழ்ந்து சிந்திக்கிறோம். அச்சிந்தனையின் பயனாய் நாம் பரலோக இராட்சியத்தையே முந்தமுந்தத் தேடவேண்டும் என்றும், அப்பரலோக இராட்சியத்தை மனிதன் எவ்வாறு தேடிக்கொள்ள வேண்டுமென்றும் பலவாறு பல உதாரணங்கள்மூலம்விளக்குகிறார்.செபஞ்செய்யும் விதம், தபஞ்செய்யும் மாதிரி, தருமஞ்செய்யும் தன்மை எல்லாம் உவமைகள், உதாரணங்கள், அனுபவங்கள் வழியாக விளக்குகிறார். உலகில அழிந்துபோகும் பொருளைத்தேடாது, நித்திய பேரின்பப் பேற்றை அடைவதற்காக, அழியாத செல்வங்களைத் தேடும்படி புத்திகூறியவர், புனித மத். 6-ம் அதி. 19-ம், 20-ம் வசனங்களில் "பூலோகத்தில உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையாதேயுங்கள். அங்கு அந்தும், துருவும் அரித்துப்போடும்; திருடரும் கன்ன மிட்டுத் திருடுகிறாகள். ஆகையால் பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச்சேர்த்துவையுங்கள்; அங்கே அந்தும் துருவும் அரிப்பதுமில்லை; திருடர்கள் கன்னமிட்டுத் திருடுவதுமில்லை" என்று மிக விபரமாகக் கூறினார். இவ்விதமாக நீதியின்படி சேமிப்பதன் பலாபலனையும் தொடர்ந்து விளக்குகிறார். "உங்கள்பொக்கிஷம் எங்கே இருக்குமோ, அங்கேயே உங்கள் இதயமும் இருக்கும்" என்கிறார்.

உண்மையாகவே இவ்வுலகில் ஒருவன் தனது யாத்திரைக் காலத்தில் எவ்விதமான பொக்கிஷத்தைத்தேடி எவ்விடத்தில் அதைச் சேமிக்கிறானே அவ்விடத்திலேயே, அவ்விடத்துக்குரியதாகவே அவனது சிந்தனை, செபலயாவும் செயல்படும். இதை யார் மறுக்கக்கூடும்? இவ்வுலகமேகதியெனச்சீவித்து, பாவமாசு படர்ந்து, நித்திய பேரின்பத்தின் நிழல்தன்னையும் காணமுடியாது வாழ்வோரை ஐசுவரியவான் லாசறு உவமைமூலம் நமக்கு விளக்குகிறார் அல்லவா? இன்றும் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ்செய்ய முடியாது. ஒருவனைப் பகைப்பான், ஒருவனைச் சிநேகிப்பான்; ஆகையால் நம்மைப் படைத்து வழி நடத்திவரும் பரலோக பிதா ஒருவருக்கே ஊழியஞ்செய்து, அவரைச் சிநேகித்து வாழும்போது, ஆகாயத்துப் பட்சிகளையும், வயலின் லீலிப் புஷ்பங்களையும் போஷிக்கும் பரமபிதா, நம்மையும் அற்புதமாய் அதிசயமாய்ப் பராமரிப்பார் என்று நமக்குக் கூறுகிறார். இந்தத் தேவபராமரிப்பை பரி. மத். 9-ம் அதி 26-ம் வசனத்தில், "ஆகாயப் பட்சிகளை நோக்கிப் பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் குவிக்கிறதுமில்லை. ஆகிலும் அவைகளை உங்கள் பரமபிதா போஷித்து வருகிறாரே; அவைகளிலும் நீங்கள் மிகவும் மேன்மையுடையவர்கள் அல்லவா?" என்று பரிவாகக் கேட்கிறார். உணவுக்காகக் கவலைப்படுவோரை ஆறுதல் படுத்தியபின், உடைக்காகக் கவலைப்படுவோருக்கு என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனிப்போம். புனி மத். 6-ம் அதி 28-ம் வச. "உடைக்காக நீங்கள் கவலைப்படுவானேன்; வயல் வெளிகளிலுள்ள லீலிப்புஷ்பங்கள் எப்படி வளருகின்றதெனக் கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதும் இல்லை. ஆகிலும் சலோமோன் முதலாய்த் தனது சர்வ மகிமையினாலும், அவைகளில் ஒன்றைப்போல் என்கிலும் உடுத்தவில்லைஎன்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று நம் பரலோக பிதாவின் அன்புப் பராமரிப்பை, வெகு தெளிவாக உதாரணமூலம் விளக்குகிறார். நம் பரலோக பிதாவிலே நமது முழு நம்பிக்கையையும் வைக்கும்படி மிகு பரிவாகக் கேட்கிறார். அழிந்துபோகும் காட்டுப் புஷ்பங்களுக்கு இத்தன்மையாய் உடுத்துபவர், அற்ப விசுவாசிகளே! உங்களுக்கு இன்னும்மேலான விதமாய் உடுத்துவிப்பார் என்று ஏன் நம்புகிறீர்கள் இல்லை? என்று கடிந்து கொள்கிறார்.

ஆகையால், அழிந்துபோகும் பொக்கிஷத்தைத் தேடாது நம் பரமபிதாவில் நம்பிக்கை வைத்து, நீதியான பாதையில் நடந்து, அவரது பரலோக இராச்சியத்துக் கடுத்தவைகளைத் தேடினால், இவ்வுலகுக்குரியவைகள் எல்லாம் நமக்குத் தேவையென்று அறிந்திருப்பது மாத்திரமல்ல, நமக்குத் தாராளமாய்த் தந்தருள்வார் என்பது நம்பிக்கை. 'படைத்தவனுக்குத் தெரியும் படியளக்க' என்பது நாடோடிப் பழமொழி. இதில் எவ்வளவு உண்மையிருக்கிறது. ஆகையால்தான் நாளையைக் குறித்துக் கவலைப்படாதேயுங்கள் என்கிறார் யேசுநாதர். வேதாகமம் நமக்கு இவ்வுண்மையைத் தெளிவாக விளக்குகிறது. இறைவனால் அழைக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள் உணவில்லையென்று உணர்ந்தபோது, அந்தவனாந்தரப்பாதையில் நாற்பதுவருட காலமாய் மன்னாஎன்னும் அற்புதஉணவினால் போஷித்தார், இறைச்சி இல்லையேஎன்று முறுமுறுத்தார்கள், புதுமையான பறவைகளை அனுப்பி அவர்களைப் போஷித்தார். அப்படியே நீர் இன்றித் தவித்தபோது கற்பாறையில் இருந்து நீர் வழிந்தோடச்செய்து, அவர்களைத் திருப்திப்படுத்தினார். இராக்காலத்தில் அவரது தூய ஆவியானவரே வெளிச்சத் தூணாகவும், பகல்நேர வெயிலில மேகமாகவும் இருந்து அவர்களுக்கு ஆதரவுபண்ணினார். இப்படியாகத் தம்மை நம்பினோரை அற்புதமாய் வழிநடத்திய இறைவன், நம்மைக் கைவிடுவாரா? நல்லதேவன் தம்மை நம்பினோரை ஒருபோதும் கைவிடார் என்ற நம்பிக்கை எம்மில் வேரூன்றவேண்டும்.

அடுத்த அதிகாரத்திலும் யேசுநாதர் பிதாவின் அன்பைப்பற்றி இன்னும் கூடுதலாக எண்பிக்கிறார். அதாவது, உங்களில் எந்தமனிதன் என்கிலும் தன்மகன் அப்பத்தைக் கேட்டால், கல்லைக் கொடுப்பானா? மச்சத்தைக் கேட்டால் சர்ப்பத்தைக் கொடுப்பானா? நீங்கள் தீயோராயினும் உங்கள் பிள்ளைகளுக்கு நன்கொடைகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதாவானவர் தம்மைவேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு எவ்வளவோ அதிகமாய் நன்மைகளைத் தந்தருளுவார் என்றுகூறி, புனி. மத். 7-ம் அதி. 12-ம் வசனத்தில், "ஆகையால் மனிதர் உங்களுக்கு எதைச் செய்ய வேண்டும்என்று விரும்புகிறீர்களோ அதை எலலாம நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்

(5-ம் பக்கம் பார்க்க)


## மாக்குருஸ்-பூ வியாபாரி

✻ திருமண வைபவங்கள்
✻ ஆராதனை அலங்காரங்கள்
✻ கோயில் திருவிழாக்கள்

மற்றும் சிறப்பான வைபவங்களுக்குரிய மாலைகள், பூச்செண்டுகள் அனைத்திற்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்.

### "மாக்குருஸ்"

சிறந்த மலர்கள், உயர்ந்த மரக்கறி வகைகள் நிறைந்த அளவில் என்றும் கிடைக்கும்.

19, லேடி மக்கலம் டிறைவ்,
நுவரெலியா:


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 29 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நிக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆ. ஐப்பசி 31ஆம் உ. சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300; தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org